உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதந்தோறும் வெளிவரும்

ஒரு தமிழ்ப்பத்திரிகை

"எனைத்தானும் நல்லவை கேட்க வனைத்தானும்
ஆன்ற பெருமை தரும்"—திருவள்ளுவர்.

தொகுதி—௪௨.] பார்த்திப-ஹு சித்திரைமீ [பகுதி—௬.

Vol. 42. April–May 1945 No. 6.

உள்ளுறை.

இன்பம்:—	மகாமகோபாத்தியாய பண்டிதமணி திரு. மு. கதிரேசச்செட்டியாரவர்கள்	௭௭—௭௯
இராமாயணோதயம்:—	ஸ்ரீ. N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.	௮0
ஒருதுறைக்கோவை பாராய்ச்சி:—	T. K. இராமாநுஜையங்கார், உதவிப்பத்திராசிரியர்	௮௧—௯0
பண்டைத்தமிழர்:—	சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், கல்லூர்	௯௧—௯௪
மதுரைத்தமிழ்ச்சங்க நிர்வாகஸபைத் தீர்மானங்கள்:—		௯௫—௯௬

பத்திராசிரியர்—திரு. நாராயணையங்கார்.

வருஷம் ஒன்றுக்கு ரூ. 4.] [தனிப்பிரதி அணா—8.

வெளிநாடுகளுக்கு ரூ. 4—8—0.

1945.

Printed by Srimathu R. Shanmuga Rajeswara Naganatha Sethupathy Avl., and Published by Thiru. Narayana Iyengar at the Tamil Sangam Power Press, No. 54, Tamil Sangam Road, Madura.

ஒரு வேண்டுகோள்.

மதுரைத்தமிழ்ச்சங்கத்தினின்று மாதமொருமுறை வெளிவரும் இச்செந்தமிழ்ப்பத்திரிகையில் வெளியிடுமாறு பொருளுரைகளும் மதிப்புரைவேண்டிப் புத்தகம் முதலியனவும் அனுப்புவோர் அவற்றைப் பத்திராசிரியர், செந்தமிழ், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும்,

செந்தமிழில் வெளியிடுமாறு அனுப்பும் விளம்பரங்களையும், பாண்டியன்புத்தகசாலைக்கு நன்கொடையாக அனுப்பும் புத்தகம் முதலியவைகளையும், செந்தமிழ் செந்தமிழ்ப்பிரசாங்கள் தமிழ்ச்சங்கப் பிரசாங்கள் சங்கக்கலாசாலை சங்கப்பரீக்ஷைகள் முதலியவை சம்பந்தமாக அனுப்பும் கடிதங்கள் மணியார்டர்கள் முதலியவற்றையும், இன்னும் இச்சங்கசம்பந்தமாயறியவிரும்பியெழுதும் பிறவற்றையும் மானேஜர், மதுரைத்தமிழ்ச்சங்கம், மதுரை என்று விலாசமிட்டும் அனுப்புமாறு இதன்மூலம் கேட்டுக்கொள்ளலாயிற்று.

லக்ஷ்மீநாராயணையர்,

மானேஜர்.

உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-சஉ.] பார்த்திப-ஞூ சித்திரை-மீ [பகுதி-சா.

Vol. 42. April—May 1945. No. 6.

இன்பம்

[திருச்சி வானொலியில் 28—4—45-ல் நிகழ்ந்த கவியரங்கில் தலைமைவகித்த திருவாளர் மஹாமஹோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியாரவர்கள் பேசிய முகவுரையும் முடிவுரையும் அநுமதிபெற்று வெளியிடலாயிற்று.]

முகவுரை

இப்பொழுது கவியரங்கில் பாடப்படுவன இன்பத்தைப்பற்றிய பாடல்களேயாகும். எல்லாவுயிர்களாலும் விரும்பப்படுவது இன்பம். அவ்வின்பம் உள்ளத்தில் தோன்றி உயிரின்கண் மகிழ்ச்சியுருவில் நிறைந்துநிற்பது. இவ்வின்பத்திற்கு ஏதுவாகவுள்ள பொருள்களும் நிகழ்ச்சிகளும் பலவாகும். உலகத்தில் ஆண்டவன்படைப்பாகவுள்ள இனிய இயற்கைப்பொருள்களின் நுகர்ச்சிகளும், மக்களால் இதற்கென அமைத்துக்கொள்ளப்படும் செயற்கைப்பொருள்களின் அநுபவங்களும் இன்பத்திற்கு ஏதுவாகவுள்ளனவாம். பலவாகிய இப்பொருள்களை அப்பர் என்னும் பெரியார் 'மாசில்வீணையும் மாலைமதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும்' எனச் சுருக்கித் தெளிவித்துள்ளார். இங்கே இன்பநுகர்ச்சிக்கு உரியனவாகக்கூறப்பட்டன ஐந்து பொருள்களாகும். மக்கள் உள்ளம் இன்புறுதற்கு ஏதுவாகிய

பொருள்களெல்லாம் ஊறும் சுவையும் ஒளியும் நாற்றமும் ஓசையும் ஆகிய ஐம்புலவடிவமாக உள்ளவை. இவ்வைந்தும் முறையே மெய் வாய் கண் மூக்குச் செவி என்னும் ஐம்பொறிகளின்வாயிலாகக் கொள்ளப்படுவனவாகும். இவ்வைம்பொறிகளின் வழியாக மனஞ்சென்று அப்புலங்களை நுகர்ந்து உயிர் அறிவில் இயைத்தலால் உயிர் இன்பம் எய்தும். ஐம்புல நுகர்ச்சிக்கும் உபலக்கணமாக இப்பாடலில் ஒவ்வொன்று காட்டப்பட்டுள்ளது. மாசில்வீணை செவிக்கும், மாலைமதியம் கண்ணிற்கும், வீசுதென்றல் உடலுக்கும், வீங்கு இளவேனில் அக்காலத்து மலரும் மலர்மணத்தால் மூக்கிற்கும், மூசுவண்டறை பொய்கை வண்டிற்கு விருந்தாகவுள்ள தேனும் இனிய நீரும் வாய்க்கும் இன்பஞ் செய்வனவாதலின் இவ்வெல்லாம் இன்பவிளைவிற்கு ஏதுக்களாம்.

இன்ப விளைவிற்குக் காரணமாகவுள்ளவற்றைத் துன்பம் செய்வனவாகக் கொள்ளுதலும் உண்டு. இங்ஙனம் கோடற்குக் காரணம் உள்ளத்தின் விபரீதத்தன்மையேயன்றி வேறன்று; சருக்கரை உண்மையில் இனிப்புச் சுவையுடையதேயாயினும் பித்துப்பிடித்தவன் வாய்க்கு அது, கைப்பாக இருக்குமாயின் அக்கைப்பிற்குக் காரணம் அப்பொருளிடத்தன்று; நுகர்பவன் உள்ளத்திருப்பதாகும். ஆகவே இன்பத்துன்பங்கள் உள்ளத்தின் நேர்மையும் கோட்டமும் ஆகும் என்று கூறுதலும் இழுக்காது.

இங்ஙனம் ஐம்பொறிகளுக்கும் தனித்தனியாக இன்பம் செய்யும் பொருள்கள் பலவாக, கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று ஐம்புலனும் ஒருங்குநுகர்தற்கு இடனாகவுள்ளது காதலின்பம் ஒன்றேயாம். இம்மையில் இக்காதலின்பத்திலும் சிறந்ததாக ஒன்று காண்டல் அரிது. 'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்பது மூதுரை. ஒரு காதற்கிழவன் பொருள் கருதிப் பிரியுங்கால் ஐம்புலனும் ஒருங்குநுகரும் இவ்வின்பத்திலும் பொருள் எங்ஙனம் சிறந்ததாகும்? எனக் கவன்றுரைத்த தோழிக்கு 'அறன்கடைப்படாஅ வாழ்க்கையும் என்றும் பிறன் கடைச்செலாஅச் செல்வமும் இரண்டும் பொருளினாகும்' என்று

அத்தலைமகன் உரைத்தானாக, 'அவ்வாழ்க்கையும் செல்வமும் இக்காதலின்பத்திற்கு அடிப்படையன்றோ' என்று அவள் கூற, மீண்டும் அவ்வறக்கிழவன் 'ஏத்துவக்கும் இன்பம் எவற்றிலும் சிறந்ததாகலின் அதற்கு இன்றியமையாமைபற்றிப் பொருள்விருப்பம் நிகழ்வதாயிற்று' என்றானாம். இஃது அறநிலையிற் சிறந்ததோர் இன்பமாகும். தன்னையும் வழங்கும் வன்மைபடைத்தார்க்கு அது கொண்டு பிறரை இன்புறுத்துதலே சிறந்த இன்பமாகும். இதன் மேலும் உள்ளத்துணர்வால் நிகழும் இன்பமும் ஒன்றுண்டு. அது பொருள்வளமிக்க சிறந்த இலக்கியங்களையுணர்ந்து பயின்று உள்ளமும் அவ்விலக்கியச்சுவையும் இரண்டறக்கலந்துநிற்கும்நிலையில் உண்டாவது.

இனி, மனம் பொறிவழிப் புறஞ்செல்லாது அகமுகமாக நிலைப்பொருள் ஒன்றைப்பற்றிநிற்ப, மெய்யுணர்வுகருவியாக உயிர் எய்தும் இன்பம் இவ்வெல்லாவற்றிலும் சிறந்ததாகும் என்பர்; இவ்வின்பமே என்றும் அழியாப் பேரின்பமாகும்.

இவ்வின்பங்களைப் பொருளாகக்கொண்டு நண்பர்களாகிய கவிஞர் பலர் இயற்றிய கவிகள் இப்பொழுது அரங்கேற்றப்படும்.

முடிவுரை.

இதுகாறும் இன்பத்தைப் பொருளாகக்கொண்டு நண்பர்களாகிய கவிஞர்பாடிய கவிகளைக் கேட்டோம். சிற்சில பாடல்கள் சொற்பொருள்வளஞ்செறிந்து இன்பஞ்செய்தன. வேறு சில, நீண்டு செல்லுதலைக் குறைத்துக் கருதிய பொருள்களைத் தெளிவிக்க முயன்றிருப்பின் நன்றாம். மற்றுஞ்சில, பாடல்முறையைப் பொருட்படுத்தியிருப்பின் இன்பஞ்செய்திருக்கும். எல்லாப்பாடல்களும் இன்பத்தை மறவாமற்கொண்டு சென்றது பாராட்டத்தக்கது.

கவியுலகம் செவ்வியமுறையிற் செழித்து மக்களுக்கு நல்லின்பஞ்செய்கவென வேண்டுகிறேன்.

ஸ்ரீ:

இராமாயணோதயம்

[ஸ்ரீ N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B A, B.L.]

நொய்தி னொய்யசொ னூற்கலுற் றேனெனை
வைத வைவின் மராமர மேழ்தொளை
யெய்த வெய்தவற் கெய்திய மாக்கதை
செய்த செய்தவன் சொன்னின்ற தேயத்தே! இராமா. பாயிரம். 5

இராமாயணத்தின் பரம மங்களப்ரதத்வத்தைக் கம்பன் நிர்வஹிக்கும்படி இது. ஒரு சாவைக்கண்டு ஸஹிக்கமாட்டாதவனான முனிபுங்கவன் ஒருவன், அந்தச்சாவைச்செய்தவனை வைதான்; அந்த வைதலே வித்தாக இராமகதை எனும் பயிர் முளைத்தெழுந்தது. இவ்விழவையொட்டி யெழுந்தநூல் ஸர்வமங்களப்ரதமாயும் நித்யகல்யாணநிஷ்டிதமாயுமிருக்குமானால் அந்த பீஜமான முதல் வாக்கியத்தைச் சொன்ன மஹர்ஷியின் வாக்கின்வைபவம் எத்தகைத்தென்பது உணரக்கிடந்தது. அவன் வாக்கால் சொல்லியுள்ள மங்களங்கள் மற்றெல்லாவற்றினும் உயர்ந்தவை என்பதற் கையமில்லை. காத்தல் மங்களமானசெய்கை என்பதை யாரும் ஒப்புக் கொள்வார்கள். நாராயணன் செய்யும் கொல்லுதலெல்லாம் காத்தலே என்பதும், அவன் காக்கும், ப்ரகாரங்களிலே கொல்லுதலும் ஒன்று என்பதும் சாஸ்த்ரங்களின் 'பரமதாத்பர்யம். "கருமம் ... அளிப்புக் கையது ... நேமி" * என்ற பொய்கையாழ்வார் அருளிச்செயலால் காத்தலேயன்றி வேறு ஒரு தொழிலை ஆழி செய்யாது என்பது திண்ணம். அவ்விதம் அவன் சரமும், இராவணனை ஸீதாபகாரத்தினின்றும் காத்தபடிதான் இராமாயணமென்பது முடிவு. † இவ்விதம் வாக்கு ஸர்வமங்களப்ரதமாய் இருத்தல் வால்மீகிபகவான்செய்த தவத்தின் செம்மையால் என்பது வ்யக்தமாகச் 'செய்தவன்' (செம்மையான தவத்தையுடையவன்) என்றார்.

---

* திவ்யப்ரபந்தம் இயற்பா முதற்றிருவந்தாதி. 5.

† வெள்ளெருக்கஞ் சடைமுடியான் வெற்பெடுத்த திருமேனி மேலுங் கீழும்
எள்ளிருக்கு மிடனின்றி யுயிரிருக்கு மிடனாடி யிழைத்த வாறோ
கள்ளிருக்கு மலர்க்கூந்தற் சானகியை மனச்சிறையிற் கரந்த காதல்
உள்ளிருக்கு மெனக்கருதி யுடல்புகுந்து தடவியதோ வொருவன் வாளி
(இராமா. யுத்தகாண். இராவணன்வதைப். 239) என்பது நோக்கத்தகும்.

ஸ்ரீ:

ஒருதுறைக்கோவையாராய்ச்சி

ஒரு துறைக்கோவையென்பது அகப்பொருளுக்குரிய கிளவிகளுள் ஏதேனும் ஒன்றனை நுவல்பொருளாக்கொண்டு 100 செய்யுளாலேனும் அதற்கு மேற்பட்ட செய்யுட்களாலேனும் இயற்றப்படும் பிரபந்தமாகும். இவ்வாறு இயற்றப்பட்ட பலகோவைகள் உளவேனும், அவற்றுள் இற்றைக்கு மூந்நூறுண்டுகளுக்குமுன் ஸேதுஸமஸ்தானாதிபதியாய்விளங்கிய ஸ்ரீமது ஹிரண்யகர்ப்பயாஜி ரவிகுல முத்து விஜயரகுநாதஸேதுபதியரசர்மீது அவ்வேந்தர்பெருமானது ஆஸ்தானப்புலவர்களுள் ஒருவரான பொன்னுங்கால் அமுதகவிராயரென்பார் நாணிக்கண்புதைக்கவருந்தல் என்ற ஒருபொருள் பற்றி நானூறு பாடல்களால் இயற்றிய கோவையே சிறப்புப்பற்றி ஒருதுறைக்கோவை என்றபெயரால் வழங்கப்படுதல் கற்றூர்பலரும் அறிந்ததொன்று.

நாணிக் கண்புதைக்க வருந்தல் என்பது, களவொழுக்கத்து இயற்கைப்புணர்ச்சிக்கண், தலைமகளாற்கூடும் கூட்டத்தின்வகை நான்கனுள் தலைமகன் தன் வேட்கைமிகுதியைத் தலைவிக்குணர்த்து முறைபாய் அமைந்தது. இதனை இடையூறுகிளத்தல் என வழங்குதலும் உண்டு; இடையூறு—துன்பம். கிளத்தல்—கூறுதல். இடையூறுகிளத்தலாவது:- தலைமகன் தலைமகளைக்கிட்டிநின்றவளவிலே தலைமகள் நாணிக் கண்புதைத்தமையால் தலைமகன் தான் உற்ற துன்பத்தைத் தலைமகட்குக் கூறுவதாகும்.

இக்கோவைப்பாட்டுடைத்தலைவனே ஒப்பாரை மிக்காரை யில்லாத பெருந்தகை; ஆயும் தமிழில் அகத்தியன், பம்பு வியாகரணம் கலைஞானங்கொள் பண்டிதரால் நம்பும் வியாழன், கம்பக்கருணையந் தேனூறு ஞானக்கனியருள்சேர் உம்பர்க்கரசனையான், கலைக்கே நெடுங்கடலன்னான், கல்வியிற்போசன், செந்தமிழும் கீதக்கலையும்

வல்லான், சத்தந்தெளிக்கும் கலைவாணர் சங்கத்தமிழ்க்குருகிச் சித்தங்களிப்பவன், காக்குங் கருணையும் கல்வியும் வாழ்வும் கவி மதுர வாக்கும் தழைத்தவன்—என்று கல்வியறிவாலும்; நடைகற்ற அன்றே கொடுப்பதுங்கற்றவன், காரா நிதி தரு சிந்தாமணி சுவர்க்கத்துடன் இப்பாராளும் இந்திரன், வானைச் சுரபியைச் சிந்தாமணியை மந்தாரமென்னுங் கானைப் பொருகொடையான், பன்னுந் தமிழ்ப்பயிர் வாடாது மாரியிற் பாரின் முத்தும் பொன்னும் சொரிபவன், சொற்பதக்கற்பனை யோரெழுத்துக்கு அத்தஞ்சோர்வதிலாமற் பதக்கத்தந்தருபவன், குஞ்சத்தை வெள்ளைக்குடையைக் கவிக்குக் குலவு சப்ரமஞ்சத்தை யீபவன், நாலாம் பனுவல் நவரசச் சொற்றமிழ்நாவலர்க்கு மேலாம் பரிசருள் மால், நாகரமுந்து தமிழோரின்மைக்கங்குல் நையச்செய் திவாகரன், இயலைத்தலை பெற்ற முத்தமிழ்வாணர்க்கு எழுமடங்கு புயலைப்பொருவுகையான், சொற்பாவலர்தங் கிளைவாழச் செம்பொன் சொரிபவன், குச்சிலையெய்தப்பெருதவரேனும் தற்கோரிவந்தால் மச்சிலையெய்தச்செய்வோன்—என்று கொடையாலும்; சயத்துக்கொருதுங்கவேள், போற்றும் கமடம் பணி குலநாகம் பொறுத்தசுமையாற்றும்புயவரையான், வில்வழக்கத்தில் தனஞ்சயன் கன்னன் விதுரனெனச் சொல்வழக்கத்துரை, சாதத்தில் ராமன், தந்தில் துவரையர்கோன், வாளும் பாசும் வயிரமுமேகொண்டு மாற்றலரையாளும் தனிவடிவேலுடையான், திடமும் ஊழும் இசையும் கொண்டு அச்சமும் தீமையும் கபடமும் ஒழித்தவன், கித்தியம் ஆண்மை அவுதாரியம் நன்மை கீர்த்தி மைந்து நித்தியமுடையான், கனம் மானம் சீர் யௌவனம் ஓகை ஈகை பொன் கல்வி மெய் விற்பனம் ஆண்மை மீறியவன், கூட்டிட நட்டைப்பிரிக்கப் பிரித்ததைக் கூட்டிப் பின்னு மீட்டிடச் செய் தந்திரன்—என வென்றி ஆள்வினை வீரம் முதலியவற்றாலும்; பாரேழ்கழனியும் வாடாது தன்மப்பயிர்விளைக்கும் கார், அறங் காவல்கொண்ட மனுமுறையால் அணிகா அசைந்து கறங்காமணி முன்றிலான், கோட்டங்கவிர்த்த குடைமன்னர்கேசரி, கவிவெப் பொழிக்கும் மாரி, தெளியேகவெண்குடைதன்னற் குளிர்செக மேழும் இசையொளியே பரப்புமவன், ஒருகாலத்தும் பொய்யுரையான், வையமேழும் பொய்யும் பழியும் தவிர்த்தவன், அதிரா இருந்த

இருட்கும் நல்லார்கலியாம் பனிக்கும் கதிராயுதித்தவன், கார்நிர யத்தைத்துரத்தியெடுத்த தன் கைவரையாற் பார்நிரைகாத்தவன், காலால் உலகை அளவிட்டமாலெனக் கைவளர்செங்கோலால் உலகை அளவிட்டமால், அயனங்களித்த இருதிணை நாற்கதியா முயிர்க்கெண் பயனங்களித்த ரகுநாதன், தென்னவரை வில்லவரை மனுவிற்றிருத்தி இசைமின்ன அரசபுரிந்தவன், நிக்ரகம் ஏனை அநுக்ரகமா மநுநீதிபுரி யுக்ர மஹாதளவாய், தேவைத்தலத்தளவா யுருவாகியமனு—என்று செங்கோன்மை முதலியவற்றாலும்; பாவுக் கிசையும் பெயரேபுனைந்து மெய்ப்பாவலர்தம் நாவுக்கிசையும் பெரும்புகழான், படியும் அமாருலகமும் ஆசையும் பாதலமும் கெடிகொளிசையுடையான், திசைபுகழ்கன்னன் குபேரன் விசயன் சிபியெனச்சொல் இசையுடையான், சந்தனு போசன் நளன் மாத வன் அரிச்சந்திரன்போல் வந்தவன், கோவைத்துறைக்குப் பதி னாயிரம்பொன் கொடுத் திசைகொள் தேவைத்துறைக்குத்துரை, கோவைத்துறையொன்றில் நானூறு கொண்ட மைக்கொண்டல், தீனத்தைவென்ற கொடைப்புகழ் கேட்கும் செவிக்கு அமுதபானத் தையொக்க ரகுநாதசேதுபதிப்பெயரோன்—என்று புகழாலும் புல வர்பாடும் பெருஞ்சிறப்புடையான். அவன் நாடோ பொன்னாடும் பூமிசைமற் றெந்நாடும் போக்குதொழும் பொருவில் சேதுநன்னாடு. பாடியபுலவனோ அமுதகவி. இவையெல்லாம் புலவர்புனைந்துரை யன்று, வாய்மையேயென்பது—இக்கோவைச்செய்யுட்களின் நடை யழகும் மொழிச்செறிவும் பொருளாழமும் கற்பனையும் அணி யமைதியும் சுவைமிகுதியும் ஆதிய பலவகைநலனும், இக்கோவை கொண்ட வேந்தர்பெருமான் இப்புலவர்பெருமானுக்கு நல்கிய பரிசில்வரலாறும் நுனித்தறிந்த புலத்திறமுடையார்க்கு நன்கு விளங்கும்.

இக்கோவைப்பாட்டுடைத்தலைவன் இதனை அரங்கேற்றச் செய்து கேட்டு இதனையியற்றிய ஆசிரியர்க்கு நல்கிய பரிசில்வர லாறு வருமாறு:—

"பல கனவான்களும் புலவர்களும் கூடியிருந்த மகாசபையில் கோவை யின் அரங்கேற்றம் தொடங்கப்பட்டது. அரசர் தம் இருக்கையில் வீற் றிருந்தார். ஒவ்வொருசெய்யுளாகக் கூறி அமுதகவிராயர் பொருள்சொல்லி

வந்தார். ஒவ்வொருசெய்யுளும் ஆனவுடன் அரசர் பொன்னற்செய்யப் பெற்ற *எலுமிச்சம்பழ மொன்றைப் புலவருக்குப் பரிசாக உருட்டி வந்தார். சில செய்யுட்கள் ஆயின. மேலே ஒரு செய்யுளைச் சொன்ன போது யாவரும் அதன் பொருட்சிறப்பிலே ஈடுபட்டார்கள். அதனால் மற்றச் செய்யுட்களைக்காட்டிலும் கவிராயருடைய திறமை அதில் வெளிப் பட்டது. அதனைக் கூறிமுடித்தவுடன் அரசர் வழக்கம்போலவே பொன் எலுமிச்சம்பழமொன்றை உருட்டினர். அப்பொழுது அருகில் இருந்த புலவர் ஒருவர், 'இந்தச் செய்யுள் மிகவும் அருமையானது. இதை மகாராஜா அவர்கள் நன்றாக உடைத்துப் பார்த்து இதன் சிறப்பை உணரவேண்டும்' என்றார். அதைக்கேட்ட அரசர், 'நாம் நன்றாக இதன் சுவையை உணர்ந் தோம். இதற்கு உருட்டிய எலுமிச்சம்பழத்தை உடைத்துப் பார்த்தால் அது தெரியவரும்' என்றார். உடனே அந்தப் பொன் எலுமிச்சம்பழத்தை உடைத்துப்பார்த்தார்கள். அதனுள்ளே மாணிக்கப்பரல்கள் இருந்தன. அரசர் வரிசையறிந்து பரிசளிக்குந்திறத்தை யாவரும் அறிந்து மகிழ்ந்து மிக வும் பாராட்டினர். பிறகு அரங்கேற்றம் இனிது நிறைவேறியது.

அதன்பின் அரசர் தம்மீது அப்பிரபந்தத்தைப் பாடியதற்காகத் தம் ஸம்ஸ்தானத்திலுள்ள பொன்னங்கால் என்னும் வளம் மிக்க கிராமத்தை அமுதகவிராயருக்கு வழங்கினர். அதுமுதல் அவருக்குப் பொன்னங்கால் அமுதகவிராயரென்ற பெயரே வழங்கலாயிற்று." †

இவ்வாறு பரிசளித்துப் பாராட்டப்பெற்ற பெருமைவாய்ந்த இந்நூலுள் ஒவ்வொரு பாடலிலும் முன் இரண்டடியிற் சேதுகாவலர் பெருந்தகையான இப்பாட்டுடைத்தலைவன் பெயரும் பெருமையும் பேசப்பட்டுள்ளன. பின்னிரண்டடியில் நுவல்பொருளான நாணிக் கண்புதைத்தல் குறிப்பாகவும் பிறிதுபொருள் வெளிப்படையாகவும் நன்கு விரித்துக்கூறப்பட்டுள்ளன. நுவல்பொருளை விரிக்குமிடத்து ஒருபாடலிற்பயின்ற கற்பனை கருத்து முதலியவை பிறபாடலில் விரவாமல் அழகுற இனிதுவிரித்துச்செல்லும் முறை பயில்வார்க் குக் கழிபேருவகை பயக்கும்.

---

* பொன்தேங்காயென்று கூறுவதும் உண்டு.

† இவ்வரலாறு, கலைமகள் என்னும் பத்திரிகையில் (தொகுதி 13. பக் கம் 398—399 ல்) மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்களால் எழுதப்பட்டுளது.

'கோவைத்துறையொன்றில் நானூறுகொண்டமைக்கொண்டல்' என்ற இந்நூற்பாடலால் இக்கோவை நானூறுசெய்யுளால் இயற்றப்பெற்றதென்று தெரியினும், இதுபொழுது 311 செய்யுட்களே கிடைத்துள்ளன. எஞ்சிய செய்யுட்களையும் தேடிக்காணும் விழைவுடன் இம் மதுரைத்தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன்புத்தகசாலையில் இந்நூற்பிரதிகள் உளவா என்று நோக்கியதில் இந்நூலின் மூலம்மட்டும் உள்ள பழைய அச்சுப்புத்தகம் இரண்டும் புதிய உரையொடுகூடிய அச்சுப்புத்தகம் ஒன்றும், மூலம்மட்டும் உள்ள ஓலைச்சுவடியிரண்டும் கிடைத்தன.

மூலம்மட்டும் உள்ள பழைய அச்சுப்புத்தகங்களுள் ஒன்று சென்னைக் கல்விச்சங்கத்துத் தமிழ்ப்புலவராகிய புதுவை நயனப்ப முதலியாரவர்களால் 1902-ம் (பிலவ) ௵ மார்கழிமீ அச்சிடப்பெற்றது. மற்றொன்று வித்வான் கா. இராமசாமிநாயுடு அவர்களாலும் கற்குளம் குப்புசாமிமுதலியாரவர்களாலும் பார்வையிடப்பட்டு 1905-ஆம் ஆண்டு சென்னை ரிப்பன் அச்சியந்திரசாலையிற் பதிக்கப்பெற்றது.

புதிய உரைப்புத்தகம், கிடைத்துள்ள 311 செய்யுட்களுடன் திரு. கா. இராமசாமிநாயுடு அவர்கள் அவற்றுக்கு எழுதிவைத்திருந்த உரையும் உடையதாக, சென்னைத்திருவாளர் வ. சொக்கலிங்கம்பிள்ளையவர்களால் 1942-ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.

மேற்குறித்த அச்சுப்புத்தகம் மூன்றிலும் 311 செய்யுட்களே உள்ளன. அவற்றுள், பிந்திய பதிப்பு, பெரும்பாலும் முந்தியபதிப்பைத் தழுவியே அமைந்துள்ளது. பிந்திய மூலப்பதிப்பிற் காணப்படும் நூலாசிரியர் வரலாறு முதலியவை புதிய உரைப்பதிப்பிலும் அப்படியே எடுத்தாளப்பட்டுள்ளன. பழைய மூலப்பதிப்புக்களில் உள்ள 116, 118, 155, 172, 173, 193, 199, 228-ஆம் பாடல்கள்

புதியவுரைப்பதிப்பில் முறையே 303, 304, 305, 306, 307, 308, 309, 310-ஆம் பாடல்களாக மாறியுள்ளன. பழைய மூலப்பதிப்பொடு புதியவுரைப்பதிப்பிடை மூலத்திற் பிரதிபேதங்களும் பல உள.

ஓலைச்சுவடி இரண்டுள், ஒன்று 490 என்னும் இலக்கம் இடப்பெற்றது; "விசையரெகுனாதசேதுபதிபேரில் ஒருதுறைக்கோவை மானூருக்கவிராயர் பாடல். சித்திரபானுஹு தைமீ உசவ புதன் வார சுபதினத்தில் மேற்பாடம் பாற்று துவக்கியெழுதினது திருச்சிற்றம்பலச்சாமினாதன் கையெழுத்து வ ஸ்ரீராமசெயம் தேவிசகாயம்" என்ற தொடக்கமுடையது; 317-ஆம் பாட்டின் முற்பாதிவரையெழுதி மைதீட்டிப் பின் அப்பாட்டின் பிற்பாதி எழுதப்பட்டு மைதீட்டாது வெள்ளெழுத்தாய்விடப்பெற்றும், 318 முதலிய செய்யுட்கள் எழுதுவதற்கு வெற்றேடுகள் சேர்க்கப்பட்டும் உள்ளது. 62 ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்டது; இதனால் இந்நூல் 400 பாடல்களுடன் நிலவிய காலமும் உண்டென்று ஊகிக்கலாகும். மற்றொருசுவடி, 537 என்னும் இலக்கம் இடப்பெற்றது; குலோத்துங்கன்கோவையோடு இவ்வொருதுறைக்கோவையும் வரையப்பெற்றது; "நன்றாக ஒருதுறைக்கோவை நாணிக்கண்புதைத்தல்" என்ற தலைப்புடன் தொடங்கி 311ம் பாடல்முடிய எழுதப்பெற்றது. இதையெழுதியவர் பெயர் முதலிய விவரம் ஒன்றும் இல்லை.

இவற்றொடு பழைய அச்சுப்புத்தகங்களிலும் புதிய உரைப்பதிப்பிலும் உள்ள செய்யுட்களை ஒப்புநோக்கியதில், சில செய்யுட்கள் ஒருபிரதியிலுள்ள முறையே பிறபிரதிகளில் அமையாமல் இடம்மாறியமைந்திருந்தன. மூலத்துள் பல சுத்தபாடங்களும் மேற்குறித்த 490-ஆம் ஏட்டிலிருந்து இதுவரை அச்சில்வாராத ஆறு செய்யுட்களும் அகப்பட்டன. ஏடுகளிற்கிடைத்த பாடங்களாலும் ஆராய்ச்சியாலும் மூலப்பதிப்பிலும் உரைப்பதிப்பிலும் ஆங்காங்குத்

திருந்தவேண்டிய பகுதிகள் பலவும் பிறவும் புலனாயின. அவை யெல்லாம் பழைய புதிய பதிப்பாளரையேனும் உரையாளரையே னும் குறைகூறும் நோக்கின்றி நூலும் உரையும் திருந்திச் சிறந்து திகழவேண்டுமென்ற ஓரே நன்னோக்குடன் இங்கே வெளியிடப் பெறுகின்றன. அவற்றுள், இதுவரை அச்சில் வாராதனவாய் ஏட் டிற்கண்ட செய்யுள் ஆறும் ஏட்டிலுள்ளபடி வருமாறு:—

சுமைதாங் கியலறி வாண்மை வலிமை சுகிர்தநன்மை
கமைதாங் கியமன மால்ரகு நாதன் கவின்வரைவா
யமைதாங் கியபுயத் தீரிமை தாங்கிய வாசுகமில்
கோமைதாங் கியவரை காட்சி யளித்துங் குணமில்லையே. (௩௱௰௨)

தருவாலங் காட்டைத் தொடுசெம்பி நாடன் சமரிலொன்னார்
வெருவாலங் காட்டுவை வேல்ரகு நாதன் வியன்சிலம்பின்
மருவாலங் காட்டுமை போல்வீர் திருமுலை வாயில்கண்டோர்
திருவாலங் காட்டையும் வெண்பாக்கம் போலத் தெரிசிப்பரே. (௩௱௰௩)

வீரைபெய் நன்னிதி போல்வாழ் குடிநிதம் வீறவைந்து
மேரைபெய் செம்பியர் கோரகு நாதன் வியன்சிலம்பிற்
சீரைபெய் நற்கணை காலி நுமதங்க தேசத்திற்செய்
தாரைபெய் யாமற் றனத்தான மீந்தென்ன சாதகமே. (௩௱௰௪)

இரத்தஞ் சரத்தை யிலம்பா டெனுமரி யின்குழவைத்
துரத்துஞ் சரவத் துரைரகு நாதன்மை சூழ்வரைவாய்ப்
புரத்துஞ் சரதமி லாரினை மத்திப் புனையிழையீர்
கரத்துஞ் சரத்தைக் கரத்துஞ் சரமெனக் காணட்டுமே. (௩௱௰௫)

எண்ணஞ் சனங்களில் லாமன் மகிழிலட் சித்தருள் ?
பண்ணஞ் சனமெய் ரகுநாத சேது பதிவரைவாய்
விண்ணஞ் சனங்க னனவிடை யீரணி மேவகல் ?
கண்ணஞ் சனமெனக் கண்ணஞ் சனத்தையுங் காட்டுகவே. (௩௱௰௬)

? இவ் வினாக்குறியிட்ட பகுதிகள் வேறு பிரதிகள் நோக்கிச் சுத்த பாடங்கொள்ளத் தக்கனவாயுள்ளன.

சீரியங் குஞ்செந் தமிழ்பாடி வண்டு செழிக்குழலிலை
வேரியம் பைந்தொடை யான்ரகு நாயகன் வீரைவெற்பில்
ஆரிய மேதோறி துயிலே யென்மொழி யாரணங்கே
காரியங் கைப்பல றுனை மேவக் கருத்துநன்றே. (௩௱௰௭)

இவையேயன்றி இந்நூலுள் இன்னும் 83 செய்யுட்கள் அச்சில் வராமல் தேடிக்காணவேண்டியனவாய் உள்ளன. ஆதலின் இந்நூல் முழுதும் அமைந்த ஓலைச்சுவடியுடையார் இந்நூலுள் அச்சில் வராத பகுதியை இச்செந்தமிழில் வெளியிட்டுதவுவாராயின் ஒரு சிறந்த தமிழ்நூல் சிதைந்துபடாமற்காத்த சீர்த்தியுடையராவர்.

இக்கோவைப்பாடல்களுள் தேடிக்காணவேண்டியநிலையிலிருப்பவை பல இருக்க, அச்சில் வெளிவந்தவற்றுள் இடைச்செருகல் என்று ஊகிக்கத்தக்கனவாய் அமைந்தனவும் சில உள. அவை வருமாறு:—

"போரயி னுகம் புலிசிலை வாள்வெம் பொறிவழங்கும்
ஆரெயில் வீரையர் கோன்ரகு நாத னணிவரைக்குள்
நீரா னகிய மைவேலை கைக்கொண்ட நேரிழையீர்
பேரா னுண கிரிதுர்க்க நீக்குதல் பெண்புத்தியே"

என்பது மேற்குறித்த இந்நூற்பிரதிகளெல்லாவற்றிலும் 41-ஆம் செய்யுளாகக் காணப்படுகிறது.

"வீரரண் போர்க்கு வெருவிமுன் சந்தி விடினுமொப்பாத்
தீர ரணமத மாரகு நாதன் சிலம்பனையீர்
நீரரன் கைக்கொண்டு வெற்பரணைத்தள்ளல் நீதியன்று
பாரர ணம்மிலை யுங்க ளரமனை பாழென்பரே"

என்பது, இந்நூற்பிரதிகளுள் பழையமூலப்பதிப்பிரண்டிலும் 283 ஆம் செய்யுளாகவும், உரைப்பதிப்புள் 275-ஆம் செய்யுளாகவும், 490-ஆம் ஏட்டில் 287-ஆம் செய்யுளாகவும், 537-ஆம் ஏட்டில் 282 ஆம் செய்யுளாகவும் காணப்படுகிறது.

இவ் விரண்டுசெய்யுளினும் பின்னிரண்டடிகளில் 'ஏமம்வேண்டுவார் எல்லா அரண்களையுமேபேணிக்கொள்வர்; நீரரண்கொண்டு மலையரண்கைவிடார்' என்பதொன்றே கூறியதுகூறலாக அமைந்துள்ளது. இது, ஒவ்வொரு செய்யுளினும் வெவ்வேறு கருத்தும் கற்பனையும் விரவிவரும் இக்கோவையமைப்பொடு மாறுகொள்ளும். அன்றியும், முந்திய செய்யுளில் பின்னடியிரண்டால் 'ஏமம் வேண்டுவார் எல்லா அரண்களையும் பேணிக்கொள்ளவேண்டு' மென்றுகூறக்கருதிய கவி, அப்பாட்டுள் பாட்டுடைத்தலைவன் பெருமைகூறும் முன் இரண்டடியினும் அத்தலைவனது வீரை நகரின் மதிலரணமைதியை இயைபுறக்கூறியிருக்கும் அழகு ஊன்றி நோக்கத்தகும். பிந்திய செய்யுள், ஈற்றடி 'பாரரணம்மிலையுங்களரமனை பாழென்பரே' என அமங்கலம் பயின்றும் முன்னிரண்டடி பொருட்சிறப்பின்றியும் காணப்படுகிறது. எவ்வகையான அமங்கலமும் குறிப்பாகவேனும் பாட்டுடைத்தலைவனுக்கியையாதவாறு காத்துச்செல்வது கவி மரபு. அம்மரபிகந்து இந்நூலாசிரியரான அமுதகவி பாட்டுடைத்தலைவன்முன்னிலையில் அரங்கேறிய இந்நூலுள், 'பாரரணம்மிலை யுங்கள் அரமனை பாழென்பரே' என அமங்கலம்படக்கூறாராதலின் மேற்காட்டிய இரண்டுபாடல்களுள் பிந்தியது இடைச்செருகலென்று ஊகிக்கத்தக்கதாயிருக்கிறது.

மேலும்,

"வண்டிற கால வலர்முல்லை யான்கவி வாணர்செய்யுட்
கொண்டிற வீகை தருரகு நாத குபேரன் வெற்பிற்
பண்டிற வாமருந் தன்னீர்வெங் காமப் பசிதணிக்கக்
*கண்டிற வாம விளநீர் கொடுத்தேன் சுவையில்லையே"

என்பது, பழைய மூலப்பதிப்பிரண்டினும் 537-ஆம் ஓலைச்சுவடியினும் 162-ஆம் பாடலாகவும், உரைப்பதிப்பில் 158-ஆம் பாடலாகவும், 490-ஆம் ஓலைச்சுவடியில் 166-ஆம் பாடலாகவும் காணப்படுகிறது.

* 'கண்டிற வாவிள நீர்கொடுத்தென்ன' என்றும் பிரதிபேதம் உண்டு.

"வளமேவு தேவை ரகுநாத பூபன் வரையிடத்தே
குளமேவு செஞ்சொற் குயிலனை யீர்நுங் கொடுவிரக
முளமேவு காம சுரதாகந் தீர்ந்திட வும்மிடத்தாம்
இளநீரைத் தந்தினிக் கண்டிற வாவிடி லென்பயனே"

என்பது, பழைய மூலப்பதிப்பிரண்டிலும் 308-ஆம் செய்யுளாகவும், உரைப்பதிப்புள் 300-ஆம் செய்யுளாகவும், 537-வது ஏட்டுள் 307 ஆம் செய்யுளாகவும் காணப்படுகிறது. 490-ஆம் ஏட்டுள் இச்செய் யுள் காணப்படவில்லை.

இவ் விரண்டுசெய்யுட்களிலும் துறைப்பொருள்விரிக்கும் பின் னிரண்டடிகள் கூறியதுகூறலாயிருத்தல் வெளிப்படை. இவற் றுள் முந்தியசெய்யுள் சங்கத்துள்ள எல்லாப்பிரதிகளிலும் காணப் படுகிறது. பிந்தியது ஓரேட்டுச்சுவடியில் இல்லை. அன்றியும் அவற்றின் நடைமுதலியவற்றை உய்த்துநோக்குமிடத்து முந்திய செய்யுள் இடைச்செருகலாயிருக்குமோ என்று சங்கிக்கத்தக்கதா யிருக்கிறது. முந்தியசெய்யுள் பசிதணிக்க இளநீரைக்குறிப்பதி னும், பிந்தியசெய்யுள் தாகந்தணிக்க இளநீரைக்குறிப்பது உசித மாதல் காண்க.

இனி, மூலத்துள் ஏட்டிலிருந்துகிடைத்த சிறந்த பிரதிபேத முதலியவை அடுத்தபகுதிமுதல் தொடுத்து வெளியிடப்பெறும்.

T. K. இராமாநுஜையங்கார்,
உதவிப்பத்திராசிரியர்.

பண்டைத்தமிழர்

சுவாமி ஞானப்பிரகாசரவர்கள், நல்லூர்.

(௬௦-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நெசவுதொழிலைச்சார்ந்தவை.

கைத்தொழில்களுள் விசேடம்பெற்றதொன்றாகிய நெசவும் தமிழருடையது என்பது நோக்கத்தகும். ஆரியருடைய பழைய உடை தோல் என்ப. பிற்காலம் மரவுரிகளைப் பின்னி ஆடையாக்குதலும் நடைபெற்றது.* தமிழர், முன் சுமேரியரோடும் எகிப்தியரோடும் ஒன்றாயிருந்தவர்கள். ஆதியில் தாங்களும் தோலுடையுள்ளவர்களாயிருந்தமைக்கு அன்னோரது பழந்தெய்வமாகிய சிவபிரான் தோலுடை அணிந்தவராகக் காட்டப்படுகின்றமை சாட்சியாகலாம். அதன்பின் தமிழர் ஏலவே மரவுரியைப்பின்னி உடுப்போராயினர் என்பது நம்முள் வழங்கும் சீலை (சீரை) எனும் பெயரால் விளங்கும்.† அப்பால் இந்தியாவில் பஞ்சைக்கண்டவர்கள் அதனை நூலாக்கி ஊடும் பாவுமாய் நெய்து உடுத்தனர். முன் சிந்து என்ற மெல்லிய துணியைப்பற்றிச் சொல்லியவற்றையும் நினைந்துகொள்க. துணிநெய்தல் தமிழரது பழையதொழிலானதுபற்றிப்போலும் நெசவுக்கும் அதனோடு கூடிய பொருள்களுக்கும் உள்ள பிறபாஷைப்பெயர்கள் பல தமிழடியாய்ப் பிறந்திருக்கக் காண்கின்றோம். இழைத்தல் எனும் பொருளுள்ள நெய் எனும் தமிழ்ச்சொல் கிரேக்கத்திலும் இலத்தீனிலும் நெயோ (Neo) என நின்று நூல்நூற்றலையும் நெய்தலையும் குறிக்கும். கிரேக்கத்தில் உள்ள நேஸிஸ் (Nesis) என்பது தமிழ்நெசவாகும். நேமா (Nema) இராட்டினம்; நேத்ரோன் (Netron) நூற்கும் கதிர்; வடமொழியில் நீவி (Nivi) என்பது பெண்கள் அரையிற்கட்டும் துணி, நெசவாலானது என்பது பொருள். கொதிக்பாஷையில் நெற்ல் (Nethla) இங்கிலீஷில் நீடிள் (Needle) என்பன நூலோடும் ஊசியாகும். நெசவுதொழிலின்பெயரோடு பின்னுதல் எனும் தொழிற்பெயரையும் அதற்கடுத்த ஒரு கருத்தில் தமிழ்தான் ஆரியமொழிகளுக்குக்கொடுத்ததுபோலும். இப்பின்னுதற் சொல் பல பாஷைகளில் ஸ்பின்னன் (Spinnan) ஸ்பின் (Spin) என நிற்கும். ஸ்பின்டிள் (Spindle) எனும் இராட்டினப்பெயரும் அதிலிருந்து வந்தது. கிரேக்கத்தில் பேனியோன் (penion) என்பது தார்க்குழலிற் சுற்றிய நூல். இலத்தீனில் பன்னுஸ்

---

* O. Schrader: op. cit. p. 328.

† திருமுருகாற்றுப்படை, 126,129 காண்க.

(pannus) பின்னியது, துணி எனப்படும். நூற்கும் கதிருக்கு வடமொழியில் தர்க்குஸ் (tarkus) கிரேக்கத்தில் அதரக்தோஸ் (atraktos) என உள்ள சொற்கள் திருகுதல் எனும் தமிழ்ச்சொல்லோடு ஒற்றுமையுள்ளனவே. வர்த்தனீ, வர்த்துலா எனும் வடசொற்களும் (vartani, vartula) வேர்த்திசில்லுஸ் (verticillus) எனும் இலத்தீனும், எமது உருட்டு எனும் சொல்லுக்கு இனமானவையாம்.

ஐரோப்பியர் அதிகமாய் வழங்கும் கம்பளியுடை (ஆல்-wool-வெள்ளை) ஆட்டுமயிரினுற் செய்யப்படுவது. வெள்ளை எனும் சொல் தமிழில் ஆட்டுப் பெயர்களுள் ஒன்று. அதற்கு அடியாயுள்ளது எலி எனும் ஆதி ஆட்டுப் பெயராம். ஆடு எனும் சொல்லிற்கும் எலி எனும் சொல்லே அடியாகிய விநோதத்தை எமது சொற்பிறப்பு ஒப்பியல் அகராதியிற் காண்க. இனி கெம்—எலி என்பது சிவந்த ஆடு. அது தான் பின் செம்மலி செம்மறி என வந்தது. கெம்மெலியிலிருந்தே மகரத்தோடு அதற்கினமான பகரம் அணைந்து (கெம்பெலி) கம்பிளி எனும் சொல் வரும். கம்பிளியாடு என்பதையும் நோக்குக. ஆரியருடைய கம்பலம் எனும் துணியும் பழந்தமிழ் நூல்களின் எலிமயிர்ப்போர்வையும் ஒன்றே எனக் காண்க. பழைய எலிச்சொல் சிங்களத்தில் எலுவ என இன்றைக்கும் நிற்பினும் அது தமிழில் வேறொரு சிறுபிராணிக்கு உரியதாகிவிட்டமையால் எலிமயிர் என்றது (மயிரற்ற) அந்தச் சிறு பிராணியின் மயிரே என்று மயங்குவாரும் உளர். * ஆட்டுப்பெயர் சுமேரியத்திலும் தமிழிலும் தமிழோடுசேர்ந்த பிற இந்திய மொழிகளிலும் ஐரோப்பியபாஷைகளிலும் ஒன்றாயிருப்பது, † சுமேரியரும் அவர்களோடு ஒன்றான தமிழருமே முதன்முதல் ஆட்டை ஓர் வீட்டுமிருகமாய் வளர்த்து அதன்பயனை அனுபவிப்போராயினர் எனக் காட்டுவதாகலாம்.

உடைக்கு உபயோகப்பட்ட கம்பிளி (செம்மலி) ரோமம் தமிழருள் முன் அறியப்பட்டதுபோலவே பஞ்சுநூலுமாம். ஆரியர் தாம் முன் அறிந்திராத பஞ்சைப் பஞ்சி (panji) என்றும் பிசு (picu) என்றும் சொல்லிவந்தனர். அவர்களுள் பஞ்சுக்கு ஆகுபெயராய்வழங்கிய வேறு சொற்கள் கர்ப்பாஸ்,

---

* ஞாயிறு I, 318 முதல் காண்க.

† சுமேரியத்தில் எலிம், சொற்பிறப்பு ஒப்பியல் தமிழகராதியில் "எலி" காண்க. வெள்ளை எனும் ஆட்டுச்சொல்லோடு வடமொழி அவிஸ், இலத்தின் ஒவிஸ் ஆதிய ஆட்டுச்சொற்களை ஒற்றுமைப்படுத்துவாரும் உளர் (Schrader, op. cit. p. 332).

கர்ப்படம், படம் என்பவை வெட்டியது என்ற பொருளுள்ளவை, நமது 'துணி'க்குச் சரியானவை. துணித்தது துணி. அறுவை என்ற பெயரும் துணிக்கு இப்படியே வந்தது. இனிப் பஞ்சு தமிழ்நாட்டினின்றே மேல் நாட்டுக்குப்போனது என்பது அதற்குரிய கொட்டை எனும் வேறொரு பெயர்தான், பினீசியர், சீரியர், கலதேயர், அராபியருக்குள் குட்டுன்(qutun) என்றும், எபிரேயருள் கெட்டொனெற் (Ketoner) என்றும், ஸ்பானியருள்ளும் ஆங்கிலேயருள்ளும் காற்றன் (Coton, Cotton) என்றும் வந்திருக்கின்றமையால் தெரியவரும். கி. மு. நாலாவது ஆயிரமாண்டளவில் பஞ்சு இந்தியாவிலிருந்து பாரசீகக்குடாக்கடல் முகரிக்கு ஏற்றுமதியாயிற்று என்றும் அங்கிருந்து எகிப்துக்குப்போயிற்று என்றும் புரொபசர் சேயிஸ் காட்டுகின்றார். இந்தியாவிலே மரங்களின் காய்களிலே கம்பிளிமயிர் காணப்படுகின்றது என்று எரொடோத்துஸ் வரைந்துவைத்தார். இந்தியாவிலே ஆதியிலே பயிரான பஞ்சு பின் மேற்குநாடுகளுக்கும் கொண்டுபோகப் பட்டது. *

அறுபத்துநான்குகலைகளும் ஆரியருடையன என்ற ஒரு எண்ணம் பலர்மனதில் இடம்பெற்றிருக்கலாம். ஆயின் கலை எனும் சொல்லே சந்தேகமறத் தமிழாகும். கலைகளுட் பெரும்பான்மையானவை தமிழ் உற்பத்தியையே உடையன.

சுமேரியரோடு ஒற்றுமைப்பட்டும் பபிலோனியரோடு சம்பந்தங் கொண்டுமிருந்தோரான தமிழர் வானசாத்திரத்தின் பலதுறைகளை அறியாமற்போயிரார்கள். அவர்கள் சூரியமாசத்தைக்கைக்கொண்டுவந்ததாக முன்னர் எடுத்துச்சொன்னோம். வாரத்தின் கிழமைகளை ஆதிநாட்களில் அறிந்திருந்தனரோ என்பது ஒரு கேள்வி. கிழமைப்பெயர்கள் தமிழேயாயிருத்தலால் ஆரியர்வரவுக்குமுன் தமிழருள் நாட்கள் அப்பெயர்களால் அறியப்பட்டிருக்கலாம். ஆரியருடைய இராசிச்சக்கரத்தில் எட்டுப்பெயர்கள் தனித்தமிழாயிருத்தல் கவனிக்கத்தக்கது. தமிழருடைய பழைய இராசி வீடுகள் எட்டே என்றகொள்கை சென்ற அதிகாரத்திலே காட்டப்பட்டது. மாதப் பெயர்களோ எல்லாம் வடமொழியாயிருந்தும் அவற்றிற்குத் தமிழ்ப்பெயர்களும் வழங்கினவாகச் சங்கநூல்களிற் காண்கின்றோம்.† அப்பெயர்கள் ஸம்ஸ்கிருதத்தின் மொழிபெயர்ப்போ எனத் துணியமுடியவில்லை. ஆரியரும்

---

* Cf. Periplus &c p. 71.

† Cf. செந்தமிழ் III. 231, 328. ஷ XIX 322-ம் பக்க முதலியவை காண்க.

முன் கிரேக்கரோடு ஒன்றுயிருந்து பிரிந்தவர்களாதலாலும், பழைய நாகரிகமுள்ள பபிலோனியரோடும் சம்பந்தங்கொண்டவர்களாதலாலும் அன்னேரைப்போலப் பதின்மூன்று சந்திரமாதங்களும் அவற்றைச் சூரியமாசங்களாக எண்ணிப் பன்னிரண்டு சூரியமாசங்களும் உள்ளவர்களாக இருக்கு வேதவாக்கியமொன்றினுல் தோன்றுகிறது (I,25-8). பன்னிரண்டு சூரியமாசங்களுக்குச்சரியாகவே அவர்களது இராசிச்சக்கரத்திலும் பன்னிரண்டு வீடுகள் இருந்தன (I, 164. 11).

ஆரியருடைய வானசாத்திரத்துக்குத் தமிழர் நேரே உதவிபுரியாவிடினும் அவர்களுடைய சோதிடசாத்திரமோ முழுதும் தமிழருடையது என்று சொல்லலாம். பழைய சுமேரியர் எகிப்தியர்களுடைய மாயவித்தைகள் குறிச்சாத்திரங்களிலெல்லாம் தமிழர் துறைபோயிருந்தவர்களென்றது மொஹெஞ்சோதரோவின் வழிபாடுகள் பழக்கவழக்கங்களால் நன்றுய்த் துணியப்படும். அவைகளினின்றுதான் ஆரியருடைய அதர்வணவேதம் பிற்காலம் எழுந்ததெனத்தோன்றும். இதனுலன்றே ஸ்ரீகண்டசாஸ்திரி என்னும் அறிஞர் மொஹெஞ்சோதரோநாகரிகம் ஆரியருடையது எனும் தமது மதத்தை நாட்டும்பொருட்டு அதனைச்சார்ந்த பல பழக்கவழக்கங்களை அதர்வணவேத ஒழுக்கங்களோடு ஒற்றுமைப்படுத்திவைப்பவராஞர்.*

[தொடரும்]

1945-ஞு மேமீ 8உ (பார்த்திப-ஞு சித்திரைமீ 26உ)
இராமநாதபுரத்தில் மஹாராஜாஅவர்களரண்மனையிற் கூடிய மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாகஸபையில் முடிவுசெய்யப்பெற்ற தீர்மானங்களின் விவரம்.

1. மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம்ராஜா R. ஷண்முக ராஜேசுவர நாகநாதசேதுபதி மஹாராஜா அவர்கள்
—அக்கிராசனுதிபதி.
2. மகா-ா-ா-ஸ்ரீ T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A., B.L. M.L.C.
—உப-அக்கிராசனுதிபதி.
3. ,, ராவ்ஸாஹெப் மு. இராகவையங்காரவர்கள்

---

* E G. Iules Bloch in Bulleten of the School of Criental Studies v. p. p. 720 & Seq.

4. ,, P. ராமஸ்வாமிராஜா அவர்கள் B.A., B.L.
5. ,, A. ரங்கஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A.
6. ,, N. R. கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரவர்கள் B.A., B.L.
—காரியதரிசி.
7. ,, V. ஷண்முகசுந்தரம்பிள்ளையவர்கள் M.A., B.L.
—கூட்டுக்காரியதரிசி.

இவர்கள் வந்திருந்தார்கள்.

தீர்மானங்கள்.

1. சங்கமாபீசு வரவு செலவு கணக்குகள் அங்கீகரிக்கலாயின.

2. இச்சங்கத்தின் அங்கத்தினராகவேண்டுமெனக்கோரிய,

(1) ஸ்ரீ. C. R. தாமோதரன் அவர்கள், Madras Race club, Guindy, Saidapet, சென்னை.

(2) பண்டித. இராமசுப்பிரமணியநாவலரவர்கள், செந்தமிழ் நிலையம், பதுமநாபபுரம், தக்கலை Po. தென்திருவிதாங்கூர்.

இவர்களை அங்கத்தினராக அங்கீகரிக்கலாயிற்று.

3. மதுரை இந்தியன்பாங்கில் வட்டிக்குக்கொடுத்துள்ள மூன்று Fixed Deposit தொகைகளாகிய ரூ. 10,000, மற்றொரு ரூ. 10,000, ரூ. 5000 இவற்றை ஷை பாங்கிலேயே, ஒவ்வொன்றையும் மறுபடியும் இரண்டு வருஷங்களுக்கு வருஷம் ஒன்றுக்கு ரூ. 100க்கு $2\frac{1}{2}$ வட்டிக்குப் புதுப்பிக்கலாமென்று தீர்மானிக்கலாயிற்று.

4. 1945–46ம் வருஷத்துக்குத் தயாரிக்கப்பெற்ற சங்கமாபீசு வரவு செலவு மதிப்புத்திட்டம் (Budget) அங்கீகரிக்கலாயிற்று.

மதுரை M. R. C. C. Bank கரெண்ட் அக்கவுண்டில் உள்ள தொகையிலிருந்து ரூ. 5000த்தை மூலதனமாக Fixed Depositல் வைக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

5. மதுரை பேச்சியம்மன்துறைரஸ்தாவிலுள்ள சங்கத்தைச்சேர்ந்த காலியிடத்தை மதுரையிலிருக்கும் N. K. R. பெரியணநாடார் மண்ணெண்ணெய்க்கம்பெனிக்கு மாதம் நாற்பதுரூபாய்வாடகைக்குக் குத்தகைக்கு விட்டிருப்பதை மறுபடியும் ஷையாருக்கே ஷையார் கேட்டுக்கொண்டபடி மூன்றுவருஷங்களுக்கு அதேவாடகைக்குக் குத்தகைக்கு விடலாமென்றும்

இது சம்பந்தமாகக் குத்தகைப்பத்திரம் சங்கக்காரியதரிசிகள் பேருக்கு எழுதி வாங்கும்படிக்கும் தீர்மானிக்கலாயிற்று.

6. இவ்வாண்டு நடத்தப்பெற்ற சங்கப்பரீக்ஷைகள் சம்பந்தமாக எழுதிய ஆபீஸ் மெமோ ரிக்கார்டுசெய்யலாயிற்று. பரீக்ஷைத்தேர்ச்சிவிவரம் தயாரானதும் சபையாருக்குத் தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

7. சங்கத்தின் 1944–45ம௵த்திய வருஷாந்தக்கணக்குகளைப் பரிசோதனைசெய்யவேண்டுமென்று மதுரை வக்கீல் மகா-ள-ள-ஸ்ரீ R. சேஷையங்கார் B.A., B.L. அவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

8. செந்தமிழ் உதவிப்பத்திராசிரியர் ஸ்ரீ. T. K. இராமாநுஜையங்கார் கேட்டுக்கொண்டபடி 22—1—45 முதல் 18½-நாட்களுக்குச் சம்பளத்துடன் ஸ்பெஷல் லீவு சாங்க்ஷன்செய்யலாயிற்று.

9. புத்தகவியாபாரிகள் வாங்கும் சங்கப்பிரசுரங்களுக்குச் சர்க்கார் உத்திரவுப்படி 100-க்கு 15 வீதம் கமிஷன் தரும்படி தீர்மானிக்கலாயிற்று.

10. சிதம்பரம் அண்ணாமலையூனிவர்ஸிடி செனெட்டுக்குச் சங்கத்தின் அக்கிராசனாதிபதியாகிய மாட்சிமைதங்கிய கனம் இராமநாதபுரம் ராஜா R. ஷண்முகராஜேசுவர நாகநாத சேதுபதியவர்களைச் சங்கத்தின் பிரதிநிதியாகத் தெரிந்தெடுக்கலாயிற்று.

11. சிவகங்கை ஸமஸ்தானத்திலிருந்து சங்கத்துக்கு வரவேண்டிய சந்தாப்பாக்கித்தொகைகளையும், நாளது 1354-ஆம் பசலி முதல் சாங்க்ஷன் செய்திருக்கிறபடி மாதம் நூறு ரூபாவீதம் ஒருவருஷத்திற்குள்ள சந்தாத் தொகையையும் சிவகங்கை எஸ்டேட் கலெக்டரவர்கள் இச்சங்கத்துக்கு அன்புடன் அனுப்பி உதவியிருப்பதற்கு இச்சங்கத்தார் நன்றிபாராட்டி ரிக்கார்டில் பதிவுசெய்தார்கள்.

12. சங்கவருஷோத்ஸவம் நடத்துவதற்கு இடமும், சௌகரியமான தேதியும் குறிப்பிடவேண்டுமென்று மாட்சிமைதங்கிய கனம் அக்கிராசனாதிபதியவர்களைக் கேட்டுக்கொள்ளலாயிற்று.

மதுரைத்தமிழ்ச்சங்கம், *R. Shanmuga Rajeswaran,*
8—5—'45. அக்கிராசனாதிபதி.